# துறையூர் நகராட்சி

2019 ஆம் வருடம் மார்ச் மாதம் 07ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு. வே. நவேந்திரன், தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 07.03.2019 | 01 | **2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் நெகிழி கழிவுகள் மேலாண்மை தொடர்பாக ஏற்படுத்தப்படும் உப விதிகள்**<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து இவ்விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.<br>**துறையூர் நகராட்சி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பயன்பாட்டை தடைசெய்தல்– துணைவிதிகள்,**<br>**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306(28A)–இன் கீழ் இயற்றப்பட்டது.**<br>1. i) **தலைப்பு:** இது துறையூர் நகராட்சி நெகிழி பயன்பாட்டை தடைசெய்தல் துணைவிதிகள்–2019 என்று அழைக்கப்படும்.<br>**ii) செயல்பாடு எல்லை:** இத்துணைவிதிகள் துறையூர் நகரின் எல்லைக்குட்பட்ட பகுதிகள் முழுமைக்கும் பொருந்தும்<br>iii) **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.<br>**iv) ஆய்வு நடத்தும் அதிகாரி :** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், அல்லது துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். | **தீர்மான எண்.114 அனுமதிக்கப் பட்டது.** |

**v) மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

vi) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:**

இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை **2**ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

**2. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு**

i) மொத்தமாக (Whole sale)

சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல் / பகிர்ந்தளித்தல்

**ii)** வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள் , மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள் , பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

**iii)** மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

iv) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

**3. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

**4. அட்டவணை II –ல் குறிப்பிட்டபடி அபராத தொகை** கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட 0நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மேல் முறையீட்டுக்கு உரிமை**

துறையூர் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள்ஆவர். இந்த துணை விதிகள் துறையூர் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**6. தண்டனைகள் விபரம்**

**அட்டவணை II**

**பிரிவு 306 (28–A) –ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 25000 |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் | 1000 | 2000 | 5000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | | | | |
| | | 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 | |

(ந.க.எண். 1064/2017/எச்1)

அலுவலககுறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

ஒம்/–வே.நவேந்திரன்,
தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர் நகராட்சி.